# தனமல்வில பிரதேச சபை
# மொனராகலை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டின் நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டின் நிதிசார் கூற்றுக்கள் 2010 மார்ச் 18 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலினைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, தனமல்வில பிரதேச சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தனமல்வில பிரதேச சபையின் நடவடிக்கைகள் தொடர்பான நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகள் என்பன உண்மையாகவும் நேர்மையாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சபையின் கெப் வண்டியைப் பழுதுபார்ப்பதற்குப் பெறப்பட்ட ரூபா 1,174,350 மூலதன உதவியின் கீழ் கணக்கிலிடப்படாது பிற வருவாயின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை மின்சார சபைக்குக் கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 33,900 முற்கொடுப்பனவுக் கணக்கில் வரவு வைக்கப்படாது திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணமாகிய ரூபா 2,500 கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) தனமல்வில வாரச் சந்தையிலுள்ள 6 கடைகளிலிருந்து பெறவேண்டிய ரூபா 120,000 மூலதன வருவாயின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போக்குவரத்துச் செலவினமாகிய ரூபா 453,389 தவறுதலாக பயணச் செலவினத்தின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஊ) செவனகல உப அலுவலகக் கட்டிடம் மற்றும் அங்குள்ள அலுவலக உபகரணங்களது பெறுமதி மதிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மூன்று கணக்கீட்டு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளது கூட்டுத்தொகை ரூபா. 1,479,479 ஆகும். துணைப் பதிவேடு/ அறிக்கைகள் என்பவற்றின் பிரகாரம் கணக்கு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா. 1,374,754 ஆகும்.

### 1.3.3 கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 ஆண்டைக் கடந்து விட்ட கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா. 2,480,395 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

**தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையினால் ரூபா. 176,790 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.5 இணங்காமை

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை** | **இணங்காமை** |
| --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதியும் நிர்வாகமும்) விதிகள் | |
| (i) விதி இல 14.1 | குறைநிரப்பு மதிப்பீடு அங்கீகரிக்கப்படாது வரவு, செலவுத் திட்ட ஏற்பாடுகளுக்கு அதிகமாக ரூபா 8,999,485 செலவிடப்பட்டிருந்தது. |
| (ii) விதி இலக்கம் 193 | ஒவ்வொரு வருமான, செலவின விடயத்தின் கீழ் வரும் மிகை/பற்றாக்குறை என்பன தொடர்பான விடயங்களை விளக்கும் கூற்றுஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iii) விதி இலக்கம் 217 | சபையின் சகல காணி, கட்டிடம் என்பன பீஎஸ் 46 மாதிரிப் படிவத்தில் அமைந்த பதிவேடு ஒன்றில் பேணப்படவில்லை |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | |
| (i) இலக்கம் 387 | சபையின் 506 மற்றும் 2033 ஆம் இலக்கக் கணக்குகளின் காசேட்டின் பிரகாரம் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா. 436,992 ,ரூபா 6,381 செலவு மீதிகள் நிலவின. |
| (ii) இலக்கம் 396(ஈ) | 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. 22,078 பெறுமதியான காலங்கடந்த 5 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |
| (iii) இலக்கம் 751(1) | ரூபா 508,589 க்கான கொள்வனவுகள் கையிருப்புப் பதிவேட்டில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. |

## 2. நிதி, செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா. 21,914 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா. 3,380,921 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| வருவாய் விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' | ரூபா.000' |
| தீர்வையும் வரியும் | 3,425 | 4,015 | 590 | 3,504 | 3,257 | 247 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,103 | 598 | 505 | 1,480 | 631 | 849 |
| பிற வருமானம் | 16,537 | 27,812 | 11,275 | 13,262 | 15,666 | 2,404 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 2 மஜிடிரேட் நீதிமன்றங்களால் 2010 டிசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு மாகாண வருவாய் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 1,500,000 நீதிமன்றத் தண்டப் பணத்தை சபை பெறவேண்டியிருந்தது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைக் கட்டணமாக ரூபா. 112,800 பெறப்பட வேண்டியிருந்தது.

### 2.2.4 வருவாய் நிலுவை

மாட்டிறைச்சிக் கடை வாடகை, மீன் விற்பனைக் கூடம், வாரச்சந்தை, பொதுக் கழிவறைகள் என்பவற்றிலிருந்து அநேக ஆண்டுகளாக நிலுவையாக இருந்துவரும் ரூபா 893,565 குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் தொடர்புடைய வேறுபாடுகளுடன் கீழே காணப்படுகின்றது.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவின விடயம்** | **வரவு,செலவுத் திட்டமிடப்பட்டது** | **உள்ள படியானது** | **வேறுபாடு** | **வரவு,செலவுத் திட்டமிடப்பட்டது** | **உள்ள படியானது** | **வேறுபாடு** |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | | | |
| | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** |
| ஆளுக்குரிய வேதனம் | 14,066 | 15,661 | (1,595) | 13,276 | 14,047 | (771) |
| ஏனைய செலவினம் | 8,818 | 6,988 | 1,830 | 4,820 | 4,772 | 48 |
| உபமொத்தம் | 22,884 | 22,649 | 235 | 18.096 | 18.819 | (723) |
| மூலதனச் செலவினம் | 5,200 | 7,539 | (2,339) | 8,690 | 1,735 | 6,955 |
| நிகர மொத்தம் | 28,084 | 30,188 | (2,104) | 26,786 | 20,554 | 6,232 |

## 2.4 மிகை அறவீடு

1987 ஆம் ஆண:டில் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(3) பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட தண்டப் பணத்திற்கமைய 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படவேண்டியுள்ள மிகை அறவீட்டு பெறுமதி ரூபா. 672,220 ஆகும்.

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

### 2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| பதவிநிலை | 2 | 1 |
| இரண்டாம் நிலை | 16 | 13 |
| ஆரம்ப நிலை | 25 | 23 |
| ஏனையவை (அமைய/ தற்காலிக) | - | 27 |

### 2.5.2 முறையற்ற நியமனம்

போலிக் கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தலின் பேரில் உள்ளுராட்சி ஆணையாளரது 2009 டிசெம்பர் 31 ஆந் திகதியக் கடிதத்தின் மூலம் சேவையிலிருந்து நீக்கப்பட்ட வருவாய் மேற்பார்வையாளர் ஒருவர் தலைவரால் 2010 ஜனவரி 1 ஆந் திகதியன்று அமைய வீதிக் தொழிலாளியாக நியமிக்கப்பட்டு 2010 டிசெம்பர் 31 வரை சம்பளம், படி ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் உதவு தொகை என ரூபா 215,388 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.6 சொத்து முகாமைத்துவம்

### அறவிடப்பட வேண்டிய ஊழியர்கடன்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 1,287,861 ஆகும். ஓராண்டிற்கும் மேலாக அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 133,804 ஆகும்.

## 2.7 வாகனப் பாவனை

(அ) ரூபா 86,388 க்கான வாகனப் பழுதுபார்த்தல் தொடர்பாக மோட்டார் வாகனப் பரிசோதகரின் அவதானிப்புரைகள் முன்னரும் பின்னரும் பெறப்படவில்லை.

(ஆ) வீதி மின்விளக்குகளைப் பொருத்துவதற்கு கொள்வனவு வழிகாட்டிமுறை பின்பற்றப்படாது லொறி ஒன்றைப் பயன்படத்தி 18 நாட்களுக்கு ரூபா 45,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) உள்ளூராட்சி ஆணையாளரது அங்கீகாரத்தைப் பெறாது கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளுக்கு புறம்பாக வாடகை வண்டியைப் பயன்படுத்தியமைக்கு ரூபா 283,700 கொடுப்பனவு செய்யப்பட்டு அதில் 181,700 தலைவரால் நாளாந்த உத்தியேயாகபூர்வமாக கடமைகளுக்கான பயணத்திற்கு உரியவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உத்தியோகபூர்வக் கடமைகளை உறுதிசெய்யும் ஆவணச்சான்று இருக்கவில்லை.

## 2.8 நட்டங்களும் இழப்புக்களும்

ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி உதவு தொகைகளைத் தாமதித்துச் செலுத்தியமையால் மீளாய்வாண்டின்போது 15,769 தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.9 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் உள்ளூராட்சி ஆணையாளரினதும் அங்கீகாரமின்றி முன்பாடசாலைச் சிறுவர் மற்றும் ஆசிரியர்களுக்கு சீருடை வழங்குவதற்கென 2010 மே 12 ஆந் திகதியன்று ரூபா 1,008,262 சபையின் நிதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

ஊவா உள்ளூராட்சி ஆணையாளரது 2010 ஜுன் 22 ஆந் திகதியக் கடிதத்தின் மூலம் இதற்கான அங்கீகாரம் வழங்கப்படுவது நிராகரிக்கப்பட்டிருந்தது. 2010 நவெம்பர் 3 ஆந் திகதியளவிலும் இச்சீருடைகள் விநியோகிக்கப்படாதிருந்தன.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 132(ஏ) மற்றும் (ஒ) பிரிவுகளின் பிரகாரம் அமைச்சரின் முன்கூட்டிய எழுந்துமூல அங்கீகாரமின்றி நலன்புரிச் செலவுகளுக்கு மீளாய்வாண்டின்போது சபையின் நிதியிலிருந்து ரூபா 160,670 வழங்கப்பட்டிருந்தது.

(இ) உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படாது சபையின் அங்கீகரிக்கப்பட்ட வரம்பிற்கு அதிகமாக 383.12 லீட்டர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14 மற்றும் தொடர்புடைய கைநூலின் 2.14.1 பிரிவு என்பவற்றின் பிரகாரம் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்படாது 19சந்தர்ப்பங்களில் ரூபா 492,417 க்கான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிரந்தன.

(ஆ) பழுதடைந்த வீதியைப் பழுதுபார்ப்பதற்கு மோட்டார் கிறேடர் ஒன்றிற்கு வாடகையாக ரூபா 961,421 மற்றும் எரிபொருளுக்கு ரூபா 292,866 என்பன தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபார்சு மற்றும் வேலை முடிவுற்றதைக் குறிக்கும் அறிக்கைகள் என்பன இன்றிக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) முன்பாடசாலையின் அமைய உதவியாளர் ஒருவருக்கு தாபன விதிக் கோவையின் 24 ஆம் அத்தியாயத்தினது 10.02 ஆம் பிரிவுக்கு முரணாக ரூபா 50,000 இடுக்கண் கடனாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) தொங்கு பாலமொன்றை அமைப்பதற்குத் தொழில்நுட்ப உத்தியோகத்தின் சிபார்சு மற்றும் வேலை முடிவுற்றதைக் குறிக்கும் அறிக்கைகள் என்பன இல்லாது ரூபா 57,494 கொடுப்பனவு செய்யப்பட்டு தனிநபர் ஒருவரிடமிருந்து 1¼ அங்குலக் கனம் வாய்ந்த 323 அடி கும்புக் பலகை கொள்வனவு செய்யப்பட்டது. இதற்கு வழங்கப்பட்ட காசோலை சபையின் செயலாளரது

பெயருக்கு வரையப்பட்டு சேவைநாடுநருக்குப் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான மகாவலி கலாசார கேந்திரநிலையம் சபையால் சுவீகரிக்கப்படும்போது நிலுவையாக இருந்த மின்சார விலைப்பட்டியல் தொகையான ரூபா 119,977 சபையின் நிதியலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) முன்னாள் தலைவர் பதவிவிலகும் போது உத்தியோகபூர்வத் தொலைபேசியை எடுத்துச் சென்றிருந்தார். பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து அவரால் பெறப்பட்ட ரூபா 17,484 தொலைபேசிக் கட்டணத்தைச் சபை கொடுப்பனவு செய்திருந்தது.

## 2.11 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

---

**பின்வரும் அவதானிப்புரைகள் அவதானிக்கப்படுகின்றன.**

(அ) கட்டிட நிர்மாணவேலைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காக 2010 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 2 தடவைகள் கூடிய திட்டக்குழுவானது 2010 ஜுன் மாதத்தின் பின்னர் கூட்டங்களை நடாத்தவில்லை. 2010 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 19 கட்டிட விண்ணப்பபடிவங்களில் 5 மாத்திரமே திட்டக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எஞ்சிய பதினான்கும் தலைவராலேயே தனிப்பட்ட ரீதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) அத்துமீறிக் குடியேறியவர்கள் அகற்றப்பட வேண்டுமெனும், வழக்குத் தீர்ப்பு ஒன்றைக் கொண்டிருந்த சபையின் காணி ஒன்றில் உள்ள அத்துமீறிய குடியிருப்பாளரை அகற்றி சொத்துக்களைத் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கையை சபை மேற்கொள்ளவில்லை.

(இ) 2005,2006 ஆம் ஆண்டுகளுக்கான பெறுமதிசேர் வரியாகிய ரூபா 237,241 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு 2010 நவெம்பர் 3 ஆந் திகதியன்றும் அனுப்பிவைக்கப்படாதிருந்தது.

(ஈ) மககம வாரச் சந்தையின் 2010 ஆகஸ்ட், செப்டம்பர், ஒக்தோபர் ஆகிய நீர்ப்பட்டியலில் ரூபா 6,228 செலவு மீதிகள் இருக்கையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமையால் ரூபா 18,654 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) சம்பளமற்ற லீவுக்கென மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட ரூபா 8,354 உள்ளுராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

(ஊ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 1,374,353 பெறுமதியான கொள்வனவுகளில் ரூபா 68,718 நிறுத்தி வைத்தவரியாக அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

(எ) பகல் வேலைகளில் அலுவலகத்தில் பணியாளர் இருக்கையில் செவனகல உப அலுவலகத்தில் பகல் காவலாளி ஒருவரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(ஏ) செவனகல முன்பாடசாலையில் உள்ள சிறுவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 40 ஆகும். எனினும் அமைய ஆசிரியர்களாக மூவர் நியமனஞ் செய்யப்பட்டிருந்தனர்.

## 2.12 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமானக் கட்டுப்பாடு